பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
16 02 2025 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா மீதான உலக நாடுகளின் நம்பிக்கை இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்திருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ் புற்றுநோய்க்கு சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

3. கட்டுமானப் பணிகளில் நவீன தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவது அவசியம் என்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு கேட்டுக்கொண்டுள்ளார்.

4. தமிழக கல்வித் திட்டங்களுக்கான நிதியை மத்திய அரசு உடனடியாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மாநில அரசு வலியுறுத்தியுள்ளது.

5. ப்ரோ லீக் ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா இன்று ஸ்பெயினை எதிர்கொள்கிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

இந்தியா மீதான உலக நாடுகளின் நம்பிக்கை இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்திருப்பதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தனியார் ஊடக நிறுவனத்தின் மாநாட்டில் பேசிய அவர், சமுதாயத்தில் அரசின் தலையீடு குறைந்த அளவில் இருக்க வேண்டும் என்பதே தமது கருத்து என்றார்.

அரசின் தலையீட்டை மேலும் குறைப்பது குறித்து ஆய்வு செய்ய ஆணையம் அமைக்கப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

செயல்பாட்டில் இல்லாத ஏராளமான நிர்வாக நடைமுறைகள் ஒழிக்கப்பட்டு, தொழில் தொடங்குவதை மேலும் எளிதாக்கும் விதமாக தற்போது ஜன் விஷ்வாஸ் திட்டத்தின் இரண்டாம் கட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 10 ஆண்டுகளில் நாடு அபரிமிதமான வளர்ச்சியை எட்டி உலகின் 5 பெரிய பொருளாதார நாடுகளில் ஒன்றாக உருவெடுத்திருப்பதை சுட்டிக்காட்டிய பிரதமர், வரும் ஆண்டுகளில் 3வது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவெடுக்கும் என்றும் தெரிவித்தார்.

<<<<>>>>

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ் புற்றுநோய்க்கு சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

ஹரியானா மாநிலம் **Jhajjar** தேசிய புற்றுநோய் நிறுவனத்தில் நடைபெற்ற மாநாட்டில் பேசிய அவர், இத்திட்டத்தின்கீழ் கடந்த 10 ஆண்டுகளில் 68 லட்சத்திற்கும் மேற்பட்டோர் புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்றிருப்பதாக தெரிவித்தார்.

மக்களின் எதிர்காலம், வாழ்வாதாரத்திற்கு புற்றுநோய் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக கூறிய அவர், கடந்த 10 ஆண்டுகளில் நாட்டில் உள்ள புற்றுநோய் சிகிச்சை மையங்கள் மூவாயிரம் கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

அடுத்த 3 ஆண்டுகளில் அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் புற்றுநோய் சிகிச்சை மையங்களை ஏற்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகவும் திரு. ஜெ.பி. நட்டா கூறினார்.

<<<<>>>>

கட்டுமானப் பணிகளில் நவீன தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவது அவசியம் என்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற இந்திய கட்டடங்கள் கூட்டமைப்பின் கருத்தரங்கில் பேசிய அவர், தொழில்நுட்ப வளர்ச்சி, குறைந்த நேரத்தில் அதிகம் சாதிப்பதை சாத்தியமாக்கியுள்ளது என்றார்.

செல்ஃபோன் முதல் செயற்கை நுண்ணறிவு வரையிலான தொழில்நுட்ப முன்னேற்றங்கள் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் புரட்சியை ஏற்படுத்தி உலக அளவில் நம்மை ஒன்றிணைப்பதாக அவர் கூறினார்.

எனினும் தொழில்நுட்ப வளர்ச்சியை பொறுப்புடனும், நிலையான வழிகளில் பயன்படுத்த வேண்டும் என்றும் திரு. எ.வ. வேலு குறிப்பிட்டார்.

<<<<>>>>

தமிழக கல்வித் திட்டங்களுக்கான 2 ஆயிரத்து 158 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு உடனடியாக ஒதுக்க வேண்டும் என்று மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி வலியுறுத்தியுள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசுப் பள்ளி மாணவிகளுக்கு தற்காப்பு குறித்து பயிற்றுவிக்கப்பட்டு வந்த நிலையில் அனைவருக்கும் கல்வித் திட்டத்திற்கான நிதி நிறுத்தப்பட்டுள்ளதால் இந்தப் பயிற்சியை தொடர முடியவில்லை என்றார்.

தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்றவர்கள், தற்போது இஸ்ரோ தலைவர் உள்ளிட்ட உயர் பொறுப்புகளில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாநில அரசு தனது சொந்த நிதியில் இருந்து மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்கி வருவதாகவும் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

<<<<>>>>

திண்டுக்கல் ரயில் நிலையத்தில் 30 கோடி ரூபாய் செலவில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருவதாக தெற்கு ரயில்வே பொதுமேலாளர் திரு. ஆர்.என். சிங் கூறியுள்ளார்.

அங்கு நடைபெறும் பணிகளை ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திண்டுக்கல் ரயில் நிலையத்திற்கு வரும் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது என்றார்.

எனவே பயணிகளின் வசதிக்காக புதிய நடைமேம்பாலங்கள் நகரும் படிக்கட்டுகள், குளிர் சாதன தங்கும் அறை, புதிய வாகன நிறுத்துமிடம் போன்றவை அமைக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்தப் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றும் திரு. ஆர்.என். சிங் கூறினார்.

<<<<>>>>

பள்ளிப் பருவத்தில் மாணவர்கள் கல்விக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்க வேண்டும் என சந்திரயான்-3 திட்ட இயக்குநர் திரு. வீரமுத்துவேல் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் தனியார் பள்ளி ஆண்டு விழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், மாணவர்கள் பாடங்களை மிகுந்த கவனத்துடன் பயில வேண்டும் என்றார்.

குறிப்பாக கணிதப் பாடத்தை கவனத்துடன் படிக்க வேண்டும் என்று வலியுறுத்திய அவர், சந்திரயான்-3 திட்டத்திலும் கணிதம் பெருமளவில் பயன்படுத்தப்பட்டதாக தெரிவித்தார்.

தேர்வுகளில் அதிக மதிப்பெண் எடுத்த மாணவ - மாணவியருக்கு, இந்த நிகழ்ச்சியில் திரு. வீரமுத்துவேல் பரிசு மற்றும் பதக்கங்களை வழங்கினார்.

<<<<>>>>

தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்று சொந்த ஊர் திரும்பிய சேலம் வீராங்கனைகளுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

உத்தராகண்டில் நடைபெற்ற இப்போட்டியின் போல்வால்ட் மகளிர் பிரிவில் சேலத்தைச் சேர்ந்த பவித்ரா வெங்கடேசன் தங்கப்பதக்கத்தையும், உயரம் தாண்டுதல் பிரிவில் கல்லூரி மாணவி கோபிகா வெள்ளிப் பதக்கமும் வென்றனர்.

வரும் காலங்களில் சர்வதேச போட்டிகளில் பதக்கம் வெல்வதே தங்களது இலக்கு என வீராங்கனைகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

<<<<>>>>

*__இருவரிச் செய்திகள்__*

யுக்ரைன் அமைதிப் பேச்சுவார்த்தைகளில் ஐரோப்பிய நாடுகள் பங்கேற்காது என அமெரிக்க அதிபரின் சிறப்பு பிரதிநிதி **Keith Kellogg** தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஆஸ்திரியாவில் சிரியா நாட்டு இளைஞர் நடத்திய தாக்குதலில் 14 வயது சிறுவன் கொல்லப்பட்டார். மேலும் 4 பேர் காயமடைந்தனர்.

<<<<>>>>

இந்தியாவில் தகவல் தொடர்பு அறிவியலின் முக்கியத்துவம் குறித்த ஒருநாள் கருத்தரங்கம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

சத்தீஸ்கர் மாநிலத்தில் நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் அம்மாநிலத்தில் உள்ள 10 மாநகராட்சிகளையும் பிஜேபி கைப்பற்றியுள்ளது.

<<<<>>>>

சிவகாசி பட்டாசு தொழில் துறையினருக்கு தமிழக அரசு தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் என மாநில அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தில் நிகழ்ந்த சமுதாய வலைகாப்பு நிகழ்ச்சியில் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் கலந்துகொண்டு கர்ப்பிணிகளுக்கு பரிசு வழங்கி வாழ்த்து தெரிவித்தார்

<<<<>>>>

தருமபுரி மாவட்டம் சோகத்தூரில் நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட 449 பேருக்கு பணி நியமன ஆணைகளை ஆட்சியர் திரு. சதீஷ் வழங்கினார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ப்ரோ லீக் ஹாக்கிப் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆடவர் பிரிவு ஆட்டத்தில் இந்தியா - ஸ்பெயினை எதிர்கொள்கிறது.

புவனேஸ்வரில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

முன்னதாக நடைபெறும் மகளிர் பிரிவு ஆட்டத்தில் இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை மணி 5.15க்கு நடைபெறுகிறது.

<<<<>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

வதோதராவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய மும்பை அணி, 19 புள்ளி ஒரு ஓவரில் 164 ரன் எடுத்தது.

165 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தில்லி அணி, 8 விக்கெட் இழப்புக்கு இலக்கை எட்டி வெற்றி பெற்றது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் குஜராத் - உத்தரப்பிரதேச அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

19 வயதுக்கு உட்பட்டோருக்கான சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Ankur Bhatacharjee** பட்டம் வென்றார்.

துருக்கியில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் அவர், 11-9, 16-14, 14-12 என்ற செட் கணக்கில் ஈரானின் **Benyamin Faraji**-ஐ வென்றார்.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் சென்னை – பஞ்சாப் அணியையும், மோகன் பஹன் அணி – கேரள அணியையும் வென்றன.

**<<<<The End>>>>**